செ.வெ.எண்.08 நாள். 04.04.2017

பத்திரிக்கைச் செய்தி

வேலை வாய்ப்பு சார்ந்த ஆலோசனை மற்றும் வழிகாட்டல் பயிற்சி 2016–17ம் கல்வியாண்டு 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வை நிறைவு செய்த மாணவர்களின் நலன்கருதி, இடைநிற்றல் இல்லாத உயர்படிப்பை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், வேலைவாய்ப்பு அமைந்துள்ள துறைகளை தேர்வு செய்வது சார்பாக மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில், மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த ஆலோசனை கருத்தரங்கு வழிகாட்டல் (Career Guidance and Counselling) என்ற பயிற்சி தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி திருநெல்வேலி மாவட்டத்தில் 06.04.2017 மற்றும் 07.04.2017 ஆகிய இரு தினங்களில் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை ஒன்றியம் வாரியாக 21 மையங்களில் நடைபெறுகிறது.

06.04.2017 அன்று காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.மு.கருணாகரன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையேற்று பாளையங்கோட்டை தூய சவேரியார் மேல்நிலைப் பள்ளியில் துவக்கி வைக்க உள்ளார்கள்.

07.04.2017 அன்று காலை 9.30 மணியளவில் மாவட்ட துணை ஆட்சியர் திரு விஷ்ணு, இ.ஆ.ப., சேரன்மகாதேவி அவர்கள் தலைமையில் சேரன்மகாதேவி ஸ்காட் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் மற்றும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு இரா.சுவாமிநாதன் அவர்கள் முன்னிலையில் கருத்தரங்கம் வழிகாட்டுதல் பயிற்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் கல்வியினால் உயர்வுபெற்ற மருத்துவர்கள், பொறியாளர்கள், வங்கி மேலாளர்கள், வழக்கறிஞர்கள், மென்பொறியாளர்கள், பட்டயக் கணக்கறிஞர்கள், பேராசிரியர்கள், வேளாண்மை பொறியாளர்கள், பாதுகாப்பு படையில் உள்ள முப்படை சார்ந்த அலுவலர்கள், ஆடை மற்றும் பின்னலாடை வடிவமைப்பாளர்கள், கட்டிடக்கலை வல்லுநர்கள், பனைப்பொருள்கள் துறை சார்ந்த துறை வல்லுநர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்கள் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த ஆலோசனை வழங்க உள்ளார்கள். எனவே 10 மற்றும் 12ம் வகுப்பினை நிறைவு செய்த மாணவ, மாணவிகள் தவறாமல் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்நிகழ்ச்சியானது கீழ்க்கண்ட மையங்களில் ஒன்றிய வாரியாகவும், கல்வி மாவட்ட வாரியாகவும் நடைபெறுகிறது.

| நாள் | நடைபெறும் இடம் | ஒன்றியம் |
|---|---|---|
| 06.04.2017 | திலக் வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, கல்லிடைக்குறிச்சி | அம்பாசமுத்திரம் ஒன்றியம் |
| 06.04.2017 | ஸ்காட் ஆசிரியர் பயிற்சி கல்லூரி, சேரன்மகாதேவி | சேரன்மகாதேவி ஒன்றியம் |
| 06.04.2017 | பரமகல்யாணி மேல்நிலைப் பள்ளி, ஆழ்வார்குறிச்சி | கடையம் ஒன்றியம் |
| 06.04.2017 | மெரிட் பாலிடெக்னிக் கல்லூரி, இடைகால், அம்பாசமுத்திரம் | பாப்பாக்குடி ஒன்றியம் |

| | | |
|---|---|---|
| 06.04.2017 | யூ.எஸ்.பி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கொடிக்குறிச்சி | தென்காசி ஒன்றியம் |
| 06.04.2017 | எவரெஸ்ட் பாலிடெக்னிக் கல்லூரி, கடையநல்லூர் | கடையநல்லூர் ஒன்றியம் |
| 06.04.2017 | தாமிரபரணி பொறியியல், கல்லூரி, தாழையூத்து | மானூர் ஒன்றியம் |
| 06.04.2017 | ப்ளாரன்ஸ் ஸ்வைன்சன் மேல்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை | பாளை புறநகர் |
| 06.04.2017 | புனித சவேரியார் மேல்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை | பாளை நகர் |
| 06.04.2017 | மாநகராட்சி (ம) மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி டவுண். | திருநெல்வேலி நகர் |
| 07.04.2017 | அருணா திருமணமண்டபம், களக்காடு | களக்காடு ஒன்றியம் |
| 07.04.2017 | ப்ரான்ஸிஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நாங்குநேரி | நாங்குநேரி ஒன்றியம் |
| 07.04.2017 | அரசு மேல்நிலைப் பள்ளி, ராதாபுரம் | ராதாபுரம் ஒன்றியம் |
| 07.04.2017 | பாத்திமா (ம) மேல்நிலைப் பள்ளி, வள்ளியூர் | வள்ளியூர் ஒன்றியம் |
| 07.04.2017 | சர்தார் ராஜா பொறியியல் கல்லூரி, ஆலங்குளம் | ஆலங்குளம் ஒன்றியம் |
| 07.04.2017 | ஐன்ஸ்டீன் பொறியியல் கல்லூரி, ஆலங்குளம் | கீழப்பாவூர் ஒன்றியம் |
| 07.04.2017 | தங்கப்பழம் நாடார் பொறியியல் கல்லூரி, வாசுதேவநல்லூர். | வாசுதேவநல்லூர் ஒன்றியம் |
| 07.04.2017 | PSR பொறியியல் கல்லூரி, செவல்குளம் | குருவிகுளம் ஒன்றியம் |
| 07.04.2017 | வையாபுரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சங்கரன்கோவில் | சங்கரன்கோவில் ஒன்றியம் |
| 07.04.2017 | விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வீரசிகாமணி | மேலநீலிதநல்லூர் ஒன்றியம் |

மேற்படி நிகழ்ச்சியில் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர், திருநெல்வேலி மெட்ரிக் பள்ளி ஆய்வாளர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், அனைவருக்கும் கல்வி திட்ட ஒருங்கிணைப்பாளர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்ட அலுவலர், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

செஞ்சிலுவை சங்கம், நாட்டு நலப்பணித் திட்டம், சுற்றுச்சூழல், பசுமைப் படை, சாரணர் படை ஒருங்கிணைப்பாளர்கள் பயிற்சியினை சிறப்பிக்கின்றனர்.

முதன்மைக் கல்வி அலுவலருக்காக,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி